கலைமகள் வெளியீடு, க.

உ

கணபதி துணை.

பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை

இயற்றிய

# ஸ்ரீ பத்மகிரி நாதர் தென்றல்விடு தூது

—:o:—

பதிப்பாசிரியர் :

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

உ. வே. சாமிநாதையர்

———

I
900

மதராஸ் லா ஜர்னல் பிரேஸ், மயிலாப்பூர்.

ஆங்கிரஸ௵ ஆனி௴

1932

Registered Copyright] [விலை அணா, 4.

கலைமகள் வெளியீடு, ௯.

உ

கணபதி துணை.

பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை

இயற்றிய

# ஸ்ரீ பத்மகிரி நாதர் தென்றல்விடு தூது

—:o:—

பதிப்பாசிரியர்:

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

உ. வே. சாமிநாதையர்

மத்ராஸ் லா ஜர்னல் பிரேஸ், மயிலாப்பூர்.

ஆங்கிரஸஹு ஆனிமீ

1932

Registered Copyright]

[விலை அணா, 4.

# முகவுரை

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

"பொடியார் மேனியனே புரிநூலொரு பாற்பொருந்த
வடியார் மூவிலைவேல் வளர்கங்கையின் மங்கையொடும்
கடியார் கொன்றையனே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அடிகே ளென்னமுதே யெனக் கார்துணை நீயலதே"

திருச்சிற்றம்பலம்

**த**மிழிலுள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் தூதென்பதும் ஒன்று. ஒரு தலைவி தான் காதலித்த தலைவனொருவன்பால் ஒரு பொருளைத் தூதுவிடுவதாகக் கலிவெண்பாவாற் பாடுதல் வேண்டுமென்பது இப்பிரபந்த இலக்கணம்; சிறுபான்மை தலைவன் தலைவிக்குத் தூதனுப்பியதாக இயற்றப்படுதலும் உண்டு. இது கடவுளர் ஆசிரியர்கள் உபகாரிகள் முதலியவர்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு அவர்களுடைய பலவகைச் சிறப்புக்கள் புலப்படப் பாடப்படும். தூதிற்குரிய பொருள்களாக அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகணவாய்ப்புள், பாங்கி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு என்னும் பத்தும் இரத்தினச் சுருக்கம் முதலிய இலக்கண நூல்களுள் கூறப்பட்டுள்ளன. இவற்றையன்றித் தத்தம் கற்பனைத் திறனுக்கு ஏற்பப் புலவர்கள் தூதிற்குரிய பொருள்களாக அமைத்துக் கொண்டவை நெல், துகில், பணம், பொன், மான், மதங்கி, மாலை, விறலி, புறா, வெள்ளாங்குருகு, தமிழ், இருள் வாசிப்பூ (இருவாட்சி), வனசம், குவளை, பாரிசாதம், பிச்சி, சண்பகம், புகையிலை முதலிய பலவாம். முற்கூறிய பத்துப் பொருள்களுள்ளும் பிறவற்றுள்ளும் உள்ள ஒவ்வொரு பொருளைத் தனித்தனியே தூதுவிட்டதாகப் பாடப்பட்டுள்ள நூல்கள் பல உண்டு. இவற்றுள் சில பொருள்களில் ஒவ்வொன்றன் சம்பந்தமாகப் பல ஆசிரியர் இயற்றிய பல தூதுகள் உண்டு. பணவிடுதூது, விறலிவிடுதூது, நெஞ்சுவிடுதூது முதலிய வகைகளில் ஒவ்வொன்றிலும் பல இருத்தல் இதனை அறிவிக்கும்.

அஃறிணைப் பொருள்கள் தூது போதற்கும் சொல்லுதற்கும் உரியனவல்லவேனும் அவற்றை விளித்துக் கூறுதலுக்குத் தலைவன் தலைவிகளின் மனமயக்கமே காரணமென்பர். இங்ஙனம் வரும்

செய்திகள் அகத்திணையிற் காமமிக்க கழிபடர் கிளவியின் பாற்படும்.

தூதுச் செய்திகளைக் கூறும் தனிப்பாடல்களும் பல உண்டு. இரட்டை மணிமாலை, மும்மணிக்கோவை, நான்மணிமாலை, கலம்பகம், அந்தாதி முதலிய பிற பிரபந்தங்களுள்ளும், தேவாரம், திருவாசகம் முதலிய திருமுறைகளுள்ளும், திவ்யப்பிரபந்தப் பதிகங்களில் உள்ள சில செய்யுட்களிலும் கீர்த்தனம் முதலிய இசைப் பாட்டுக்களிலும் தூதுச் செய்திகள் வந்துள்ளன.

வடமொழி முதலிய பிற மொழிகளிலும் தூதுப் பிரபந்தங்கள் உள்ளன. மகாகவி காளிதாசரால் இயற்றப்பெற்ற* மேக ஸந்தேசமும், ஸ்ரீ வேதாந்த தேசிகரால் இயற்றப்பெற்ற ஹம்ஸ ஸந்தேசமும், பிகஸந்தேசம், மயூர ஸந்தேசம், சுகஸந்தேசம், காகஸந்தேசம், பிரமரஸந்தேசம், மனஸ்ஸந்தேசம், பவனதூதம் முதலியனவும் வடமொழியிலுள்ள ஸந்தேசங்கள். இவ்வாறே தெலுங்கு கன்னடம் மலையாளம் முதலிய திராவிட மொழிகளிலும் பல ஸந்தேசங்கள் உள்ளனவென்றும், அவற்றுள் மலையாள மொழியில் வழங்கும் மயூர ஸந்தேசம் என்னும் நூலொன்று மிக்க சுவையுடையதாக உள்ளதென்றும் கூறுவர். சிங்கள மொழியில் சேவல் ஸந்தேசம், சேலாலிஹினி ஸந்தேசம் என்பன போன்ற நூல்கள் உள்ளன வென்றும் கேட்டிருக்கிறேன். பாலிபாஷையிற் பௌத்தமதச் சம்பந்தமான தூதுகள் சில உள்ளன என்பர். எனவே, தூதினைக் கூறும் நூல்கள் அறிஞர்களால் இயற்றப்பெற்றும் பெரிதும் பாராட்டப்பெற்றும் வந்தனவென்பது முற்கூறிய பலவகை நூல்களுண்மையால் பெறப்படுகின்றது.

பத்மகிரிநாதர் தென்றல்விடுதூது என்பது பத்மகிரி (திண்டுக்கல்) என்னும் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ பத்மகிரிநாதர் பவனி வரும்பொழுது அவரைத் தரிசித்து அவர்பால் அன்புற்று மையல் கொண்ட தலைவி ஒருத்தி, தென்றலை அவர்பால் தூதுவிட்டதாகப் பலப்பட்டடைச் சொக்கநாத பிள்ளை என்னும் புலவர்பெருமானல் இயற்றப்பெற்றது. இதிலுள்ள கண்ணிகள் 123. இந்நூல் பாடாண்டிணையில் கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்தின்பாற்படும்.

தென்றலைத் தூது விடுவதாகச் சொல்லப்படும் நூல் இதனையன்றி இப்பொழுது வேறு கிடைக்கவில்லை. தூதுவிடும் பொருள்

---

* இது தலைவன் தலைவிபால் மேகத்தைத் தூதாக அனுப்பிய காவியம்; ஸந்தேசம் - தூது.

களுள் தென்றல் ஒன்றென்பது முற்கூறிய இலக்கண நூல்களாலன்றியும், "அன்றில் குயில் தென்ற லவைவிடின்மாருப்பகையாய், ஒன்றுவன தூதா யுதவுமே" (கச்சி. ஆனந்த. வண்டு. 338), "துன்று தென்றலெதிர் சென்றிடிற் கடிது தோள்கொள் பூணிரையெனக்கொளும்" (வாட்போக்கிக் கலம்பகம், 26) என வருவனவற்றுலும் அறியப்படுகின்றது.

பத்மகிரி என்பது திண்டுக்கல்லின் திருநாமம். படைப்பின் தொடக்கத்தில் இத்தலத்தில் பத்ம தீர்த்தமென ஒன்று உண்டாக, அதன் நடுவில் ஒரு தாமரை யரும்பு தோன்றிற்று; அவ்வரும்பே பின்பு மலையாயிற்று; தாமரை யரும்பின் வடிவாயிருத்தலின் இம்மலை பத்மகிரி யென்னும் பெயர் பெற்றதென இத்தல மாகாத்மியம் கூறும். இதற்குத் [1]திண்டீச்சுரம் என்னும் திருநாமமுமுண்டு. திண்டி யென்னும் ஓர் அசுரன் அம்பிகையால் சங்காரம் செய்யப் பெற்றபொழுது தன் பெயரால் இந்நகரம் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டபடி அமைந்தது இத்திருநாமமென்பர். இத்தல விருட்சம் நெல்லி. அதனுல் இது நெல்லி வனமென்றும் வழங்கும்

இது தேவார வைப்புஸ்தலங்களுள் ஒன்று.

"தெள்ளும் புனற்கெடில வீரட்டமும்
திண்டீச் சரமுந் திருப்புகலூர்"
(திருநாவுக்கரசு நாயனுர் தேவாரம், காப்புத். 8)

"திண்டீச்சரஞ் சேய்ஞலூர் செம்பொன் பள்ளி
தேவூர் சிரபுரஞ்சிற் றேமஞ் சேறை"
(திருநா. தே. க்ஷேத்திரக். 9)

"கோடீச் சுரங் கொண்டீச் சுரந் திண்டீச்
சுரங்குக்கு டேச்சுரமக்கீச் சுரம்"
(திருநா. தே. அடைவு. 8)

இத்தலத்திலுள்ள சிவபெருமான் திருநாமம் [2]ஸ்ரீ பத்மகிரி நாதர் என்பது. அம்பிகையின் திருநாமம் அபிராமவல்லி என்பது. இத்தலத்தில் பதும தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் உள்ளன.

ஆசிரியர் இந்நூலுள் இந்தத்தல வரலாறுகளையும் பலவகைச் சொல்லணி பொருளணிகளையும் எதுகை மோனை நயங்களையும்

---

1. திண்டிவனத்தையும் திண்டீச்சுர மென்பர் சிலர்.
2. பத்மகிரீசுவரர் எனவும் வழங்கும் (Ins., S. Dts., p. 72. No. 8.)

அமைத்திருக்கின்றார். தூதுவிடப்படும் பொருளாகிய தென்றலைப் பலவகையாகச் சிறப்பித்துப் பாராட்டுகின்றார்.

தென்றல் தமிழோடு மிக்க தொடர்புடைய தென்பதைப் புலப் படுத்தி முதலில், "செந்தமிழின் பின்னுதித்த தென்றலே" (4) என விளித்தல் அறிந்து இன்புறற் பாலது; "தண்டமிழ்த் தென்றல்" (கம்ப. அயோமுகி. 6), "தென்னந் தமிழி னுடன்பிறந்த சிறுகால்" (மீனாட்சி. பிள்ளைத். தாலப். 1), "சந்தன சலத்தினின்றுந் தமிழுட னளைந்து வந்த, மந்தமா ருதம்" (திருவிரிஞ்சைப் புராணம், கௌரீ புரச். 26) எனப் பிறரும் இத் தொடர்பைக் கூறியுள்ளார்.

இந்நூலில் காற்றைப்பற்றிய பலவகைச் செய்திகள் அழகாக அங்கங்கே அமைத்துச் சொல்லப்பட்டுள்ளன. ஆசிரியர் பல நூல்களிற் பயிற்சியுடையா ரென்பதை அவை காட்டுகின்றன. தென்றலானது மன்மதனது தேர் என்பதை நினைந்து கூறும் பின்வரும் செய்திகள் மன்மதனது பிறபடைகளுக்கும் தென்ற லாகிய தேர்ப்படைக்கும் உள்ள வேற்றுமைகளைக் காட்டுகின்றன: 'தென்றலே, மன்மதனது மூன்று படைக்கும் முதற் படையே, அவனது யானையாகிய இருள் சூரியனைக் கண்டால் ஓடி விடும்; அவனுடைய குதிரையாகிய கிளி பூனையைக் கண்டால் பறந்து போய்விடும்; அவனுடைய சேனையாகிய பெண்கள் யானைப் படை யாகிய இருளைக் கண்டால் தூங்கிவிடுவார்கள். அவனது நாற் படைகளுள்ளே நீயே சிறப்புடையை' (5-8), 'அர்த்ததம் முதலிய மூன்று வகை இரதங்களையும் வென்ற மகாரதம் என்றற்குரிய மாரனது இரதமே' (67)

வாயு பஞ்ச பூதங்களில் ஒன்றென்னும் செய்தியை நினைந்து ஏனைய பூதங்களுக்கும் இதற்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக் கூறிச் சிறப்பிக்கின்றார்: 'காற்றே, உன்னுடைய வடிவமானது அப்பு, தேயு என்பனபோல் கட்புலனாவதோ? அன்றி ஆகாயத்தைப் போல் ஒளித்து விடுவதோ?' (10)

இன்னும், காற்றுப் பத்துவகை யென்னும் செய்தியை நினைந்து திருமாலுக்குரிய பத்து அவதாரங்களும் வாயுவின் பத்து வகையைப் போற் சிறந்தனவல்ல (9) என்று கூறுகின்றார். மூச்சுக் காற்றை நினைந்து, 'உன்னுடைய ஓட்டம் இல்லாவிடில் உயிருக்கும், உடலுக் கும் சஞ்சாரம் ஏது? திருமூலர் எழுபதுகோடியுகம் இருந்தது யாரால்?' (12-3), என்பதையும், 'கும்பகஞ் செய்கின்ற மூக்கில் நீ உறைவாய்' என்னும் பொருள்பட, "கோரங் கொளாதகும்ப கோணத் துறைவாய் நீ" (35) என்பதையும் அமைக்கின்றார். ஒலி

காற்றினாற் பரப்பப்படுவது என்னும் உண்மையை, "உற்றறியுஞ் சத்தமெல்லா முன்குணமென் னார்விசும்பு, பெற்றகுண மென்பரது பேய்க்குணங்காண்" (23), "கருங்குயிலின், காளத்தொனிநீ கடத்தி விடா யேற்சக்ர, வாளத்தை யெல்லாம்போய் மண்டுமோ" (64-5) என்பவற்றிற் புலப்படுத்துகின்றார். பறத்தலுக்குக் காற்று இன்றி யமையாத தென்பதை மன்மதன் எய்கின்ற அம்பு ஓடுவதும் (64) கிளி தேரை இழுத்துச் செல்வதும் (66) காற்றினாலே எனக்கூறிக் குறிப்பிடுகின்றார். காற்று, மணத்தைப் பல விடங்களிலும் பரப்பும் தன்மையை, "வாசனையை நீவளரா விட்டான் மலரேது, பூசனையே ஈசனை யார் போற்றுவார்" (32-4) என்பன முதலியவற்றிலும், "தென்மதுரை, ஐயனை நம்புமோ ரந்தணன் கல்யாணம், செய்ய வுபாயமொன்று சிந்தித்தாய்" (58-9) என்பதிலும் சொல்லிப் பாராட்டுகின்றார்.

இவற்றையன்றி, காற்று விராட்புருடனது மனத்துக்கு அதிட்டான தேவதை (14-5) என்பதையும், பாம்புக்கு உணவு (19) என்பதையும், மேகத்தைப் பலவிடங்களிற் பரப்பும் தன்மையுடையது (21) என்பதையும், கப்பல் ஓடுவதற்கு உதவுவது (26-8) என்பதையும், ஒரு திசைக்கு அரசுரிமை வாய்ந்தது (28-9) என்பதையும், மூன்று நாடிகளில் முதல் நாடிக்குரியது (30) என்பதையும் அங்கங்கே அமைத்துள்ளார்.

ஆஞ்சநேயரும் வீமசேனனும் மிக்க பலத்தை யடைந்ததற்குக் காரணம் அவர்கள் வாயுபுத்திரர்களாயினமையே (16-7) என்பது, வாயு மேருகிரியை முறித்தது (20), சிவபிரானது அக்கினிக் கண்ணின் பொறியைத் தாங்கிவந்தது (31), குசநாபன் மகளிர் முதுகை ஒடித்தது (24-5) முதலிய புராண இதிகாசச் செய்திகளின் முகத்தாலும் காற்றின் பெருமையைத் தெரிவிக்கின்றார்.

திருப்பூவணம், திருவேங்கடம், திருப்பூந்துருத்தி, திருவரங்கம் என்பவற்றோடு காற்று, தொடர்புடையதென்பதும், திருக்காளத்தியில் இறைவர் காற்றுருவாக எழுந்தருளி யிருக்கின்றாரென்பதும், காற்றுத் திருவாரூர்ச் சாளரத்திற் புகுந்து தியாகேசருக்கு இன்பம் செய்வதென்பதும், காஞ்சீபுரக் கோயிற் செப்புவாசல் வழியேவந்து இன்பம் பயப்ப இயங்குவதென்பதும், மதுரையில் ஸ்ரீ சொக்கநாதக் கடவுள் தருமிக்குப் பொற்கிழியளித்ததற்குக் காரணமாக இயற்கை மணத்தைப் பரப்பியதென்பதுமாகிய பிறதலச் செய்திகளையும் இதிற் காணலாம்.

கண்ணபிரான் 'ஆறு இருதுக்களுள் வசந்த ருது நான்' என்று பகவத் கீதையில் திருவாய்மலர்ந்தருளிய செய்தியை எடுத்துக்

கூறி அவ்வாறு அவர் கூறத்தக்க சிறப்பை வசந்தருது அடைந்தது அவ்விருது தென்றலின் துணைபெற்றமையினாலேயே (61-2) எனக் காரணங் காட்டுகின்றார்.

தென்றலை ஒரு யுவராசனாக உருவகம் செய்து அஃது உலா வருங் கோலத்தைத் தொடர்பு பெற அமைப்பதும் (38-48), அதனை ஒரு குழந்தையாக உருவகம் செய்தலும்(52-5,112) அறிதற்குரியன.

'வெம்புலியை வாலுருவி விடுதல்' (45), 'பழம் நழுவிப் பாலில் விழுதல்' (46) என்னும் பழமொழிகளை உரிய இடத்தில் எடுத்தாளுகின்றார்.

இத்தலத்துச் சிவபெருமானைப்பற்றிய செய்திகள் கூறப்படும் பகுதியால் (73-93) பத்ம தீர்த்த வரலாறு, நெல்லிவனமென்னும் பெயர், இதன்பால் தூண்டா விளக்கு ஒன்றுண்டென்பது, திண்டீச்சுரமென்னும் திருநாமம், வருணனும் அகத்தியரும் இத்தலத்திற் பூசித்தது, அம்பிகையின் திருநாமம் அபிராமவல்லி யென்பது, திருவிழாவின் சிறப்பு, திருத்தேர் எட்டாந்திருநாளில் நடைபெறுதல் முதலியவை அறியப்படுகின்றன.

தலைவி ஸ்ரீ பதுமகிரிநாதரைக் கண்டு மயக்கங்கொண்டு முறையிடுவதாகச் சொல்லும் பகுதியில் (95-105), 'ஒரு செவ்வந்திப் போதால் உறையூரை அழித்தநீர் அப்பொழுது இந்தச்செவ்வந்திப் போதால் (அந்திப்பொழுது) அழித்திருக்கலாமே' (103) எனத் திரிசிரகிரித் தலச்செய்தியையும், 'என்னுடைய விழி இரண்டும் இராமேசருக்குரிய தனுக்கோடியைப்போல நீர்ப்பெருக்குடையன வாயின' (108-9) எனத் தனுக்கோடி என்னும் தீர்த்தத்தையும் ஆசிரியர் கூறுகின்றார்.

பிற தூதுப் பொருள்களை அனுப்பாமைக்குத் தலைவி கூறும் காரணங்கள் (112-7) சிலேடை முதலிய அணிகளும் தொனியும் அமையச் சொல்லப்படுகின்றன. இங்ஙனம் விலக்கப்பட்ட தூதுப் பொருள்கள் வண்டு, மயில், அன்னம், கிளி, மேகம் என்பனவும் பாங்கியும்.

யமகம் (97-8), திரிபு (21, 38-9, 53, 56, 68, 72, 95, 99, 104, 106-7, 109-11, 117-8, 120-21) என்பவற்றை இந்நூலில் இடையிடையே காணலாம்.

இந்நூலின் ஏட்டுப்பிரதி ஒன்று இற்றைக்கு 47 வருஷங்களுக்கு முன்பு திருநெல்வேலித் தெற்குப் புதுத்தெரு வக்கீல் ஸ்ரீசுப்பையா பிள்ளையவர்கள் வீட்டிற் கிடைத்தது. அப்பிரதி ஊர்க்காட்டுச் சாமிநாத வாத்தியார் என்பவருடையது. அதன்

பின் இதுவரையில் வேறு பிரதி ஒன்றும் கிடைக்கவில்லை. இந்நூலுடன் அழகர் கிள்ளைவிடுதூதும் சேர்ந்து இருந்தது. கிடைத்த பிரதி சிதையாததாக இருந்தமையின் அவ்வாறே பதிப்பிக்கலாயிற்று.

திண்டுக்கல் சம்பந்தமான சில செய்திகளை அவ்வூர் வக்கீல் ம-ா-ா-ஸ்ரீ எல். ஏ. வேங்குசாமி ஐயரவர்கள் எனக்கு அன்புடன் தெரிவித்தார்கள்.

இந்நூலைக் கலைமகள் என்னும் பத்திரிகையில் வெளியிடும்படி என்னைத் தூண்டி அங்ஙனமே செய்வித்துதவிய அப்பத்திரிகையின் அதிபர் ம-ா-ா-ஸ்ரீ ஆர். நாராயணசாமி ஐயரவர்களுக்கும் பத்திரிகாசிரியர்களுக்கும் என் நன்றி உரியதாகுக.

தேவாரம்

திருச்சிற்றம்பலம்.

முன்றில்வாய் மடற்பெண்ணைக் குரம்பைவாழ் முயங்குசிறை
அன்றில்காள் பிரிவுறுநோ யறியாதீர் மிகவல்லீர்
தென்றலார் புகுந்துலவு திருத்தோணி புரத்துறையுங்
கொன்றைவார் சடையார்க்கென் கூர்பசலை கூறீரே.

திருச்சிற்றம்பலம்.

"தியாகராஜ விலாஸம்"
திருவேட்டீசுவரன்பேட்டை
10—6—32

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

# ஆசிரியர் வரலாறு

இந்நூலாசிரியராகிய பலபட்டடைச் சொக்கநாத பிள்ளையென்பவர் இற்றைக்குச் சற்றேறக்குறைய 200 வருஷங்களுக்கு முன்னர் மதுரையில் இருந்தவர். இவருடைய மரபினர் பலபட்டடைக் கணக்கு என்னும் ஒருவகை உத்தியோகம் பார்த்து வந்தவர்கள். இவருடைய தந்தையார் பெயர் சொக்கலிங்கம் பிள்ளை என்பது. இவர் பலபட்டடைச் சொக்கநாதக்கவிராயர் எனவும் வழங்கப்படுவர்.

இவர் மதுரை ஸ்ரீ சொக்கநாதக் கடவுளிடத்தும் ஸ்ரீ அங்கயற் கணம்மையிடத்தும் அளவிறந்த அன்பு பூண்டவர். அவ்விருவர் விஷயமாகவும் இவர் செய்த தனிப்பாடல்கள் பல உண்டு. இவர் திருவனந்தல் முதல் அர்த்தசாமம் வரையிலுள்ள காலங்களில் ஆலயத்திற்குத் தரிசனம் செய்யப்போகையில் அப்பொழுதப்பொழுது மனமுருகிப் பாடல்கள் இயற்றுவது வழக்கமென்று சில முதியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவை தமிழ்ச்சுவையை ஊட்டுவனவும் படிப்பவர்களுடைய மனத்தை உருகச்செய்து பக்தியை விளைவிப்பனவுமாக இருக்கும். மதுரைத் தல விஷயமாக அந்தாதி ஒன்றும் மும்மணிக்கோவை ஒன்றும் இவர் இயற்றியுள்ளார். இராமேசுரத்திற்கு உலாவொன்றும் இவராற் பாடப்பட்டுளது. அது தேவையுலா வென வழங்கும். அந்நூலிலிருந்து அக்காலத்து இராமநாதபுரத்தில் விஜயரகுநாத சேதுபதி (கி. பி. 1711-1725) என்பவர் அரசாண்டு வந்தார் என்று தெரிகிறது. திருமாலிருஞ்சோலைமலை அழகர்மீது கிள்ளைவிடுதூதொன்று இவர் பாடியுள்ளார். இதனால் இவர் சைவராக இருப்பினும் சமரசமான கொள்கையுடையவர் என்பது புலப்படும். கன்னிவாடியில் அக்காலத்தில் ஜமீந்தாராக இருந்த நரசிங்க நாயகர் மேல் இவரியற்றிய வளமடல் ஒன்றுண்டு. அதனால் அந்த ஜமீந்தாரால் இவர் ஆதரிக்கப்பட்டவர் என்பது புலப்படும்.

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் எழுதப்பட்டுள்ள சில பழைய ஏட்டுச் சுவடிகளில் கடவுள்வாழ்த்தின்பின்னுள்ள சிறப்புப்பாயிரச் செய்யுட்கள் இரண்டு இவரால் இயற்றப்பெற்றனவென்றெழுதப்பட்டிருத்தலின் அந்நூலரங்கேற்றிய பொழுது கேட்டு இன்புற்றவர்களுள் இவரும் ஒருவர் என்று தெரிகிறது.

கணபதி துணை.

பலபட்டடைச் சொக்கநாத பிள்ளை

இயற்றிய

# ஸ்ரீ பத்மகிரி நாதர் தென்றல்விடு தூது

## காப்பு.

### நேரிசை வெண்பா.

நன்றிதரு பத்மகிரி நாதர்மே னீதிசேர்
தென்றல் விடுதூது செப்பவே—வென்றிதரும்
அன்னத்தா னத்தானு மந்நத்தான் மாமனும்
கன்னத்தா னத்தானே காப்பு.

## நூல்.

### கலி வெண்பா.

1. கார்பூத்த மேனிக் கருணைப் பெருங்கடலும்
சீர்பூத்த வேதத் திருமலையும்—பார்பூத்த
2. ஏனோரும் வானோரு மெல்லோரு மோர்நிறையாத்
தானோர் நிறையாச் சமன்செய்ய—மேனாளிற்
3. சம்பத் துதிக்குந் தரணி தராசென்னக்
கும்பத் துதிக்குங் குறுமுனியும்—அம்பிற்போய்

---

குறிப்புரை.

காப்பு : நன்றி - நன்மை. பத்மகிரி - திண்டுக்கல்மலை. அன்னத்தான் அத்தான் - அன்னவாகனத்தையுடைய பிரமதேவருக்கு அத்தைமகன். அநத்தான் - அந்தச் சங்கத்தை உடைய திருமால் ; நத்து - சங்கு. கன்னத்தானத்தான் - செவிமதத்தை யுடைய விநாயகர் ; கன்னம் - காது.

1. கடல் - திருமால். திருமலை - பிரமதேவர்.

3. சம்பத்து - பொன். "பொருட்கொண், டிடங்கொண்ட பூமி" (77-8) என்பர் பின் ; பூமிக்கு வசுந்தரா என்றுள்ள பெயர்ப்பொருள் இங்கே கருதற்குரியது. குறுமுனி - அகத்தியர். அம்பிற்போய் - அம்பைப் போல வேகமாகச் சென்று.

4. நந்துமிழுந் தண்பொருநை நன்னதியுஞ் சேர்பொருப்பிற்
செந்தமிழின் பின்னுதித்த தென்றலே—குந்தமெனத்

5. தோன்றுபடை யைந்துடையான் றூயபடை நாலுக்குள்
மூன்று படைக்கு முதற்படையே—ஆன்றமதன்

6. ஆனை பரிதியைக்கண் டாலொளிக்கு மேகுதிரை
பூனையைக்கண் டாற்பறந்து போய்விடுமே—சேனையெனும்

7. பெண்படைதா னுனைப் பெரும்படையைக் கண்டவுடன்
கண்படை கொள்ளுமே கட்டுரையாய்—நண்படையும்

8. நாற்பலத்தி லேயு நடுப்பலத்தி லேதுண்டு
காற்பலமுன் பேர்ப்பலத்தாற் கைச்சயங்காண்—ஆற்றன்மால்

9. மின்வடிவம் பத்தும் விதனப் படும்வடிவே
நின்வடிவம் பத்தும் நிசவடிவே—உன் வடிவம்

---

4. நந்து - சங்குகளை. உமிழும் - வீசுகின்ற. பொருநை நதி - தாமிரபர்ணியாறு. பொருப்பில் - பொதியில் மலையில் ; பொருப்பென்பதே பொதியிலுக்கு ஒரு பெயராக வழங்குகிறது ; "பொருப்பிற் பொருந" (மதுரைக். 42) ; "பொருப்பிலே பிறந்து" (வி. பா. சிறப். 2.) செந்தமிழின் ............தென்றல் : "தென்னந் தமிழி னுடன்பிறந்த சிறுகால்" (மீனாட்சி. பிள்ளை. தாலப். 1.) குந்தம் - வேல்.

5. படை - ஆயுதம் ; இங்கே அம்பு. உடையான் - மன்மதன். படை நாலு - ரத கஜ துரக பதாதிகள். முதற்படை - தேர்ப்படை; மன்மதனுக்குத் தென்றல் தேர்.

6. ஆனை - இருள் ; இருள் மன்மதனுடைய யானை. குதிரை - கிளி; "பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்காற், கீச்சுக்கீச் சென்னுங் கிளி" தனிப்.

6—7. சேனையெனும் பெண்படை : "பொன்னிற் குலவு மோரிரண்டு பொருப்பு விருப்பி னுடன்பரித்து, மின்னிற் குலவு மென்படைக்கு மெலியா தெவரே வலியாரே" (பாசவதைப்பரணி, 359) ; மாதர்கள் இரவில் தூங்கி விடுவார்கள் என்பது கருத்து.

8. நாற்பலம் - சதுரங்கசேனை ; பலம் - படை; மூலபலம் என்றதைப் போல. நடுப்பலம் - யானைப் படையும் குதிரைப் படையும். காற்பலம் - காலாட்படை. உன் பேர்ப்பலம் என்றது காலென்னும் பேரைப் பெற்றதைக் குறித்து நின்றது ; காலென்பது காற்றுக்கு ஒரு பெயர்.

8—9. மால் மின் வடிவம் பத்தும் - திருமாலுடைய ஒளி வீசுகின்ற அவதாரங்கள் பத்தும். விதனம் - வியசனம் ; துக்கம். நின் வடிவம் பத்தென்றது தசவாயுக்களை ; அவையாவன : பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், தனஞ்சயன், கூர்மன், கிருகரன், தேவதத்தன்; "ஒப்பார் பிராண னபான னுதானனுடன், தப்பா வியானன் சமானனே -

10. பார்போற் கடும்புனல்போற் பாவகன்போற் காண்பதோ
ஊ.போற்றும் விண்போ லொளிப்பதோ—நேர்பெற்ற
11. இந்திரிய மேது குறைந்தா லு மிவ்வுடல்கீழ்
முந்திரிகை நேர முடங்குமோ—இந்த
12. உயிர்க்கு முடற்கு முறவுசெயு முன்றன்
இயக்கமல்லாற் சஞ்சார மெங்கே—மயக்கம்
13. இகவுணர்ந்த மூல ரெழுபது கோடி
யுகமிருந்த தாரா லுரையாய்—சகமுழுதும்
14. றன்னுருவ மான விராட்டுருவிற் றுண்முதலாய்ச்
சென்னி வரைக்குமதி தேவதையாய்—முன்னே

---

இப்பாலும், நாகன் றனஞ்சயன் கூர்மன் கிருகரன், தீதிலாத் தேவதத்த னே'' சிலப். 3 : 26, அடியார். மேற்.

10. பாவகன்-அக்னி. காண்பதோ - காணப்படுவதோ ; காற்று அரூபி யென்றபடி. பூமி நீர் கனல் என்ற இவற்றிற்கே உருவமுண்டு. வாயுக்கு உருவமில்லை. விண் - ஆகாயம். காற்றுப் பரிசத்தா லறியப்படுதலின் விண்போ லொளிப்பதோ வென்றார்.

11—12. இந்திரியம்-பொறி. கீழ் முந்திரிகை-ஒரு சிற்றளவு. எந்த இந்திரியம் குறைந்தாலும் உயிர் உடலில் வாழ்தல் குறையாது ; மூச்சு இயங்காவிடின் உயிர் நில்லாதென்பது கருத்து ; "உறுவலி யில்லா மாய வுடம்பினை யுள்ளே நின்று, பிறிவிலா தியக்கு கின்ற பிராணவா யுக்கோ விப்ப, அறுகயிற் றூசல் போல வங்கொடிங் குண்ணின் றூட்டும், பொறியறு பாவை போன்று வீழ்ந்தனர் புவனத் துள்ளோர்'', "மாத்திரைப் போழ்து மேனி நிற்குமோ வாயு வின்றி, மூத்திரப் புரீட வாயி லடைத்தலான் முடுகு தோற்பை, காத்திரம் பெருத்து வீங்கக் கண்செவி மூக்கு நாத்தோல், சூத்திர மற்றுச் சிந்துந் தொகுமணிக் கோவை போன்ற'' உத்தர. அநுமப். 24, 26.

13. இகவு - நீக்கம். சுவாச பந்தனஞ் செய்யும் யோகசாதனையால் திருமூலர் எழுபது கோடியுகம் இருந்தா ரென்பாராதலின் இவ்வாறுகூறினர். "செப்புஞ் சிவாகம மென்னுமப் பேர்பெற்றும், அப்படி நல்கு மருணந்தி தாள்பெற்றுத், தப்பிலா மன்றிற் றனிக்கூத்துக் கண்டபி, னொப்பி லெழு கோடி யுகமிருந் தேனே'' (84) என்னுந் திருமந்திரச் செய்யுள் எழுகோடி யெனக் கூறும் ; எழுபது கோடி என்பது திருமந்திரத்தின் பாடம்போலும். "பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோர், எழுபது கோடி யுறும்'' (குறள். 639) என்பதன் உரையில், 'எழுபது கோடி என்றது மிகப்பலவாய எண்ணிற்கு ஒன்றுகாட்டியவாறு' எனப் பரிமேலழகர் எழுதியிருத்தலால் எழுபதுகோடி யென்பது பன்மை சுட்டவந்த வாய்பாடு என்பது பெறப்படும். எனவே, பலகோடியுகம் என்னும் பொருளில் 'எழுபது கோடியுகம்' என்பது வந்ததாகக் கொள்ளலுமாம் ; "இருந்தேனிக் காயத்தி லெண்ணிலி

15. உதித்தவரே யன்றி யுனைப்போன் மனத்துக்
கதிட்டான தேவதைதா னூர்கா ண்—உதிட்டிரன்

16. ஆமன் னவன்முதலா மைவர் தமக்குள்ளே
வீம னதிகபல மேவியதும்—நாமறிய

17. மைவாய்க்கும் வாரிதியை மாருதி சென்றுசிறு
கைவாய்க்கா லாகக் கடந்ததுவும்—மெய்வாய்க்கும்

18. உன்வீ ரியத்தி னுறுதியே யல்லாமல்
வென்வீ ரியமவர்க்கு வேறுண்டோ—என்வாயால்

19. வீண்பல பேசியென்ன மேதினியைப் பாம்பெடுப்ப
தூண்பலமோ பின்னை யொருபலமோ—நாண்பூட்டி

20. வில்லாய்ச் சிவன்வளைத்த மேருவைப் போய்முறிக்க
வல்லா யுனைப்போல் வலியாரார்—சொல்லரிய

21. நீருவரை வாங்கு நெடுமுகிலைக் கொண்டிழுத்து
மேருவரை சூழ விளைவிப்பாய்—மேருவரை

22. சுற்றிவரச் சந்திர சூரியரெய்ப் பாரேநீ
சற்றுமிளைப் பாயோ சதாகதியே—கற்றறிந்தும்

---

கோடி, யிருந்தே னிராப்பக லற்ற விடத்தே, யிருந்தே னிமையவ ரேத்தும் பதத்தே, யிருந்தேனென் னந்தி யிணையடிக் கீழே" (திருமந்திரம், 90) என்பது இக்கருத்தை உறுதிப்படுத்தல் காண்க.

15. உதிட்டிரன் - தருமபுத்திரர்.

16—17. வீமனும் மாருதியும் வாயு புத்திரர்கள். மாருதி - அனுமார். சிறு கைவாய்க்காலாக - மிகச் சிறிய கண்ணிவாய்க்காலாக.

18. வென் வீரியம் - வெற்றியைத் தரும் வன்மை ; வென் - வெற்றி.

19. பாம்பு என்றது ஆதிசேடனை. ஊண்பலம் : பாம்புக்குக் காற்று உணவு ; "வாயுவான பஞ்சடைத்து மாயோன் றுயிலு மலரணையே" சேவ் வந்திப். திருமலைச். 30.

20. வாயுவுக்கும் ஆதிசேடனுக்கும் போர் நிகழ்ந்தபொழுது வாயு மேருமலையின் சிகரங்களில் மூன்றை முறித்துவிட்டனன் என்பது வரலாறு ; இதனை உத்தர ராமாயணம் அரக்கர் பிறப்புப் படலத்தாலுணர்க.

21. நீர் உவரை - கடல் நீரினது உவர்ப்பை. நீர்.........முகில் : "இழிந்த மாந்தர்கைப் பொருள்களு மிகபரத் தாசை, கழிந்த யோகியர் கைப்படிற் றூயவாய்க் களங்கம், ஒழிந்த வாறுபோ லுவரியுண் டுவர்கெடுத் தெழிலி, பொழிந்த நீரமு தாயின புவிக்கும்வா னவர்க்கும்" (திருவிளை. நாட்டு. 16.) சூழ - வலம்வர.

22. எய்ப்பார் - இளைப்பார். காற்று இளையாமல் எப்பொழுதும் இயங்குமென்பதைக் குறித்தற்கு, 'சதா கதியே' என விளித்தார்.

23. உற்றறியுஞ் சத்தமெல்லா முன்குணமென் ஞர்விசும்பு
பெற்றகுண மென்பரது பேய்க்குணங்காண்—வெற்றிபெறும்

24. கூற்றுவரு மஞ்சுங் குசநாபன் செல்வியர்கள்
நூற்றுவர்த மெய்யி னுழைந்தோடி—ஊற்றுவாத்

25. தேனுர்க்குங் கூந்தற் றிருந்திழையார் மெய்யெல்லாம்
கூனுக்கும் வல்லமையைக் கூறுவதார்—மீனுர்க்கும்

26. ஆழி கடந்தோடி யம்பொன் கொடுவருதல்
ஊழி முதலே யுனதருளே—தாழா

27. தவிழ்த்தலு மோட்டாம லத்தனையுங் கொட்டிக்
கவிழ்த்தலு முன்னருளே கண்டாய்—குவித்தநிதி

28. தேட்டுக்கு நீயே சிரசென்ப துன்னடுத்த
வீட்டுக் குபேரன் விளம்பானே—ஈட்டும்

29. குவைநிதிகட் கெல்லாங் குபேரனர சானல்
அவனடுத்த வீடேசொல் லாதோ—சிவனறிய

---

24—5. குசநாபன் என்னும் அரசன் புதல்வியர் நூற்றுவர்பாற் சென்று வாயு தன்னை மணஞ்செய்துகொள்ளும்படி கேட்ப அவர்கள் மறுத்ததனல் அவர்களுடைய முதுகை ஒடித்தனனென்பர்; இவ்வரலாறு கம்பராமாயணம் வேள்விப் படலம் ஏழாவது செய்யுள் முதலியவற்ருல் அறியப்படும்.

25. தேன் - வண்டுகள்.

27. இக்கண்ணியின் பொருள் ஒரு வடமொழிச் சுலோகத்தின் பொருளோடு ஒப்புநோக்கற்குரியது. அதன் மொழிபெயர்ப்பு வருமாறு:

மீகாமன் செயன்முறையும் பிறழ்ந்ததுவீழ்ந் தனதுடைப்பு
மீன்றேன் ருமல்

ஆகாய மறைத்தபுய லம்புதியோ கடக்கரிதா
லங்தோ மார்க்கம்

ஏகாத விதமலைக ளுடையதுளெ விதைக்கரைப்பா
லேகச் செய்து

நீகாவ லதுகவிழிவ் விரண்டுமுன்றன் கையனவா
நிகழ்த்துங் காலே.

28. தேட்டுக்கு - தேடுதற்கு. சிரசு - சிரம்; "சிரசிருக்க வேண்டிலுங்க டிருமுகங் கிழித்தெறி" (அழகர்கலம். 25) என்பதனற் சிரசு என வழங்கலும் மரபென்பது பெறப்படும். இங்கே தலைமை என்பது பொருள். அடுத்தவீடு என்றது அடுத்த திசையை. எட்டுத் திசைகளுள்ளும் வடமேற்காகிய வாயு திசைக்கடுத்தது வடக்காகிய குபேரதிசை.

29. நிதி இருநிதியென்றும் நவநிதியென்றும் இருவகையாகக் கூறப்படும்.

30. முத்தா துவினு முதற்ருது நின்ருது
எத்தாது சொல்லுநீ யெத்தாது—பித்தனுர்

31. வீரியத்தை நீவாங்கா விட்டால்விண் ணேரவதி
காரியத்தை யெண்ணக் கணக்குண்டோ—நேரியற்கை

32. வாசனையை நீவளரா விட்டான் மலரேது
பூசனையே தீசனையார் போற்றுவார்—ஈசன்

33. திருப்பூ வணத்துந் திருவேங் கடத்தும்
மருப்பூ வகமலர வைத்தும்—திருப்பூந்

34. துருத்தியிலும் வாழ்வாய் சொலுந்திருக்கா ளத்தி
நிருத்தர் வடிவெல்லா நீயே—வருத்தமுறக்

35. கோரங் கொளாதுகும்ப கோணத் துறைவாய்நீ
சேரங்க மன்ருே திருவரங்கம்—பாரெங்கும்

---

30. முத்தாது - வாத பித்த சிலேட்டும நாடிகள். நின் தாது என்றது வாதநாடியை; அதனை முதலாகக் கூறுதல், "வளிமுதலா வெண்ணிய மூன்று" (குறள். 941) என்பதனுலும் பெறப்படும். பித்தனுர் - சிவபெருமான்.

30—31. சூரபன்மனைச் சங்கரிக்கும் பொருட்டு ஒரு குமரனை அளித்தருள வேண்டுமென்ற தேவர்களின் வேண்டுகோளின்படி சிவபெருமான் தம் நெற்றிக் கண்ணிலிருந்து உண்டாக்கிய ஆறு தீப்பொறிகளை முதலில் அக்கினியும் பின்பு வாயுவும் தாங்கினர் என்பது கந்தபுராண வரலாறு. அவதி காரியத்தை - துன்பச்செயல்களை. கணக்கு உண்டோ; அளவில்லாத் துன்பத்தை யடைவார்களென்றவாறு.

32. வளராவிட்டால் - பரவச் செய்யாவிட்டால் வாசனையைக் காற்று வளர்த்தல் கந்தவகனென்னும் அதன் பெயராலும் அறியப்படும்; "சதா கதிவசத்தால் வரும் வள்ளிதழ்ப் போதின் கடிமணம்போல்" வேங்கைக் கோவை, 25.

33—34. திருப்பூவணமும் திருப்பூந்துருத்தியும் புஷ்பவன மெனவும் அத்தலங்களிலுள்ள சிவபெருமான் திருநாமம் புஷ்பவன நாதர் எனவும் வழங்கும். அதனுல் அவ்விரண்டு தலங்களும் இங்கே கூறப்பட்டன. "சிந்துபூ மகிழுந் திருவேங்கடம்" என்னும் திருவாய்மொழிப் பாசுரத்திற்கு வியாக்யானம் அருளிச் செய்துகொண்டிருக்கையில் உடையவர், "திருவேங்கடத்தில் திருநந்தவனத் தொண்டு செய்வாருண்டோ?" எனக் கேட்க அனந்தாழ்வாரென்பவர் அங்கே சென்று ஒரு நந்தவனம் வைத்து வளர்த்து வந்தாரென்பர். அவரால் வைக்கப்பட்ட நந்தவனத்தில் தென்றல் உலாவுதல் பற்றித் திருவேங்கடத்தை இங்குக் கூறினுர். பஞ்ச பூதலிங்கங்களுள் காளத்திலிங்கம் வாயுலிங்கமென்று கூறப்படும்.

35. கோரம் - கொடுமை. கும்பகோணத்து - கும்பகம் செய்யும் நாசியின்கண். கும்பகம் கும்பமென நின்றது. கோணம் - மூக்கு. கும்பகோண

36. நன்னிதிக்கு வீறுவர நல்குந் தியாகேசர்
சன்னிதிக் காபரணந் தானுவாய்—பின்னெவரும்

37. வாஞ்சை பெறச்செப்பு வாசல் வழியேபோய்க்
காஞ்சிபுரத் துன்மகிமை காட்டுவாய்—பூஞ்சோலைப்

38. பூங்கொத்து மேய்ந்த புதிய மணவறையில்
ஆங்கொத்து நீவா ழாரண்மனையை—நீங்கித்தான்

39. பந்தியம் போது பசுந்தேனுன் மேலிறைக்க
அந்தியம் போதுவிளை யாடுவாய்—சந்தனத்தின்

40. மட்டலொஞ் சோலைதனின் மாலையெனு மேகவன்னப்
பட்டுமேற் கட்டி பலதூங்கக்—கட்டவிழும்

41. அம்பரு வாவி யலர்த்தூளெல் லாமடங்கக்
கொம்பிறுல் சிந்திக் குளிர்விக்கப்—பம்பு

42. மயிலினங்கள் கைகட்டி வாய்பொத்தி நிற்கக்
குயிலினங்கள் கட்டியங்கள் கூறப்—பயிலும்

---

மென்னும் ஒரு தலப் பெயர் தொனித்தது. திருவரங்கத்தில் தெற்கு நோக்கிச் சயனித்துள்ள திருவரங்கநாதர் திருமுகத்தில் தென்றல்படுவது கருதி 'நீசேரங்கமன்றோ திருவரங்கம்' என்றார்.

36. "தென்றல் மணங்கமழுந் தென்றிருவாரூர்" (தே.) தியாகேசர் பக்கத்தில் உள்ள பல்கணி வழியாகத் தென்றற் காற்றுச் செல்லும்; இதனைப் பல புலவர்கள் பாராட்டியுள்ளார்கள்; "மன்றற் றிருச்சா லகத்து வழி நுழைந்து, தென்றல் தவழுஞ் செழுங்காவே", "தென்றல், மருவந்த வாயி லருகே - பருவம், தருமுபசா ரங்கள்செவிச் சார்சமய மேயோ", "தென் னுலவை, ஆதி திருச்சா லகத்தோட மாட்டாதென், றோதீ மலர்பொதியா வோதியாள்" திருவாரூருலா, 172, 377-8, 436-7.

37. வாஞ்சை - ஆர்வம். செப்புவாச லென்பது காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கோயிலில் உள்ள ஒருவாசல். அதன் வழியேவரும் காற்றுப் பாராட்டப்படும்; "அப்பா குமரகோட் டக்கிரை செவ்விலிமேட், டுப்பாகற் காய் பருத் திக்குழிநீர் - செப்புவா, சற்காற்றுக் கம்பத் தடியிற் றவங்கருமா, ரிப்பாய்ச்சல் யார்க்கு மினிது" காளமேகப்புலவர் பாடல்.

38. அரண்மனை யென்றது சோலையை.

39. பந்தி அம் போது - வரிசையாகிய அழகிய மலர்கள்.

**இனிச் சோலையில் தென்றல் உலாவுதலின் சிறப்புக் கூறப்படும்.**

40. மேக வன்னப் பட்டு - மேகமாகிய அழகிய பட்டு. கட்டு: அம்புக்கும் மலருக்கும் பொது.

41. அம்பு என்றது மன்மதன் பாணங்களாகிய தாமரையையும் குவளையையும். கொம்புத்தேன் சிறந்தது. பம்பு - பரவிய.

43. பழுதிலளி சங்கீதம் பாடவிள வேனிற்
பொழுது மெலநடந்து போவாய்—தொழுதகைய

44. வாண்மேவுங் கண்ணார் வனமுலைமே லாடவர்தம்
தோண்மேற் றவழ்ந்து சுகஞ்செய்வாய்—கோண்மேவும்

45. அம்புலியைத் தன்குட்டி யாய்வளர்க்குங் காமமெனும்
வெம்புலியை வா லுருவி விட்டிடுவாய்—வெம்பாப்

46. பழநழுவிப் பாலில் விழுந்ததுபோன் மாதர்
கொழுநரைப் போய்வலியக் கூடி—முழுதும்

47. அவராத் திரியாகா தன்றைப் பொழுது
சிவராத் திரியாகச் செய்வாய்—யுவராசப்

48. பட்ட முனக்குப் பரந்தாமன் கட்டினதுன்
சட்டமறிந் தன்றோ தனிமுதலே—இட்டமுடன்

49. ஆகமே யின்புறநீ யாலிங் கனஞ்செய்தால்
தேகமே மோட்சமென்று செப்பாரோ—தாகமுற

50. வாசந் திமிர்ந்து மதுர ரசங்குளிர்ந்து
தேசங்கள் சந்த்ர திலகமணம்—வீசவே

51. விக்கினந்தீ ரக்குளிர்ந்த வேளையிலே கோதூளி
லக்கினம்பார்த் தன்பா யெழுந்தருள்வாய்—அக்கினிபோற்

52. காந்துகனக் கோடையாற் கன்றிக் கரைந்துவிடும்
வேந்தருனைச் சந்திக்க மேடையினும்—பூந்தடத்தும்

---

43. அளி - வண்டு. இளவேனிற்பொழுது - வசந்த காலம்.

45. அம்புலி - சந்திரன். காமமுற்றோரைத் துன்புறுத்துங் கொடுமை பற்றிச் சந்திரனைப் புலிக்குட்டி யென்றார்; "அம்புலி வெம்புலியே" (சீகாழிக்கோவை.) புலியை வாலுருவி விடுதலால் துன்பம் விளைதல் போலக் காமத்தால் துன்பம் விளையும் என்றபடி; "இனிவிடுமோ வயப்புலியை வாலுருவி விடுகின் றீரே" வி. பா. சூதுபோர்ச். 265.

46. "விலகரிய கொங்கைமீது பழநழுவி வந்து பாலில் விழுவதென வந்து சேர்கிலீர்" அருணைக். 66.

47. அவராத்திரி - வீணான இரவு. சிவராத்திரி-விழித்துக்கொண் டிருக்கும் இரவு; இது குறிப்பு; "சிவநிசி யின்னதிலே" கோடீச். 184.

47—8. யுவராசப்பட்டமென்றது பஞ்சபூதத் தோற்றத்தில் வாயு இரண்டாவதாக நிற்றலைக் குறித்தது.

51. கோதூளி லக்கின மென்பது பசுக்கள் தூளி பறக்கும்படி வீட்டிற் குத் திரும்பிவரும் மாலைக்காலம். அக்காலத்திற் புறப்படுதல் நன்றென்பர். அக்காலத்துத் தென்றல் தவழும்.

52. தடம் - தடாகம்.

53. தூதா யனத்திடத்துஞ் சொல்லுமட வாரிடத்தும்
வாதா யனத்திடத்தும் வந்திருந்து—நீதாவி

54. ஏறுங்கா லுன்கா லிதமாக வெற்புடனே
மாறும் புயத்திடத்து மார்பிடத்தும்—சேறுபடத்

55. தட்டுப் புழுகு சவாது பனிநீரும்
விட்டுக் கழுவி மெழுகிவைப்பார்—கட்டிக்கொண்

56. டாரா விடாய்தணியா ராயிழையார் மேல்வாளி
மாரா விடாயென்று வாய்விடுவார்—சீராய்

57. அணைவார் கலவி யமுதருந்தி நித்தம்
மணவாள ராய்மகிழ்ந்து வாழ்வார்—இணையிலிகேள்

58. உன்மகிமை யித்தனையு மென்று லுனைப்புகழ
என்மனதும் வாக்கு மிலக்காமோ—தென்மதுரை

59. ஐயனை நம்புமோ ரந்தணன் கல்யாணம்
செய்ய வுபாயமொன்று சிந்தித்தாய்—கையால்

---

53. ஆராய்ச்சி செய்யும் அன்னத்திடத்திலும் தூது சொல்லும் மடவார். வாதாயனம் - பல்கணி; "போதாருந் தென்றல் புகுதுகைக்கு மாளிகையின், வாதா யனந்திறந்து வைப்பையே" ஏகாம்பரநாதருலா.

52-3. வேந்தர் வந்திருந்து.

54. இதமாக - இன்பமாகும் பொருட்டு.

55. தட்டுப் புழுகு - தட்டி எடுக்கும் புழுகு.

56. ஆரா விடாய் - தணியாத காமத் தாகம். மாரா விடாய் - மன்மதனே விடாதே.

57. மணவாளர் - கலியாணமுடையவர், வாசனையை யுடையவர்.

59. அந்தணன் - தருமி. ஒரு பாண்டியன், தன் தேவியோடு மேன்மாடத்தில் உலாவிக் கொண்டிருக்கையில் அவளுடைய கூந்தலிலுள்ள இயற்கை மணத்தைக் காற்றால் அறிந்தான்; உத்தமப் பெண்களின் கூந்தலுக்கு இயற்கை மணம் உண்டென எண்ணினன். அவ்வெண்ணத்தை யார் அறிந்து செய்யுளாகச் செய்கின்றனரோ அவருக்கு ஓராயிரம் பொன் உரியதென்று கூறி அத்தொகையை ஒரு கிழியிற் கட்டிச் சங்கமண்டபத்தின் முன் ஒரு கம்பத்தில் தொங்கவிட்டான். ஸ்ரீசொக்கநாதருக்குப் பூசைசெய்யும் அர்ச்சக பரம்பரையானகிய தருமியென்னும் பிரமசாரி தனக்கு மணம் புரிந்து கொள்ளப் பொருள்வேண்டு மென்று அக்கடவுளை வேண்ட அவர் ஒரு செய்யுளெழுதிக் கொடுத்துப் பாண்டியன் வைத்த கிழியைப் பெற்று மணம் செய்து கொள்ளும்படி செய்தார். இது திருவிளையாடற் புராணத்திலுள்ள தருமிக்குப் பொற்கிழி யளித்த திருவிளையாடலால் உணரப்படும். தன் மனைவியின் கூந்தலின் மணத்தைப் பாண்டியன் அறிவதற்குக் கருவியாக இருந்தது காற்றாதலின் இங்ஙனம் கூறினர்.

60. அறந்தழைக்குஞ் சந்தனுவுக் காகக் கலிங்கம்
திறந்து கொடுத்துதவி செய்தாய்—அறிந்து

61. கசந்தருது வைந்துமென்று கண்ணன் கடிந்து
வசந்தருது நாமென்ற வாக்கைப்—பிசைந்தெடுத்தால்

62. உன்னைத் துணைக்கொண்ட தொன்றுமே யல்லாமற்
பின்னைத் துணையுண்டோ பேசுவாய்—புன்னை

63. தழைந்தபெருங் காவிற் றவழ்ந்து திரியும்
குழந்தையென் றூர்தாங் குறியார்—வழங்கும்

64. கரும்பு தனிற்பூட்டிக் காமவே ளெய்யும்
அரும்புபறந் தோடுவதா ராலே—கருங்குயிலின்

65. காளத் தொனிநீ கடத்திவிடா யேற்சக்ர
வாளத்தை யெல்லாம்போய் மண்டுமோ—நீளத்தான்

66. வீரச் சிறகினிநீ மேவா விடின்மதனன்
தேரைக் கிளியிழுத்துச் செல்லுமோ—நேரொத்த

67. சாரரத மூன்றுஞ் சயித்திரத மீதுபயில்
மாரரத மென்னு மகாரதமே—ஆரமுதே

68. மந்தா நிலமேயிம் மாநிலத்தோர் செய்தபுண்ணி
யந்தா நிலமே யனிலமே—நொந்து

---

60. சந்தனு - சந்தனுவாக வந்த வருணன். இங்குக் கூறிய வரலாற்றைப் பாரதத்திற் சம்பவச் சருக்கத்தால் உணர்க.

61. கசந்த - வெறுக்கப்பட்டன. ருதுவைந்தும் - இளவேனிலொழிந்த பெரும்பொழுது ஐந்தும். வசந்தருது நாமென்ற வாக்கு : "இருதுவாறில் வந்தவிள வேனினன்" (பகவற்கீதை, 10: 22.) பிசைந்தெடுத்தால் - ஆராய்ந்தால்.

61-2. வசந்த காலத்தில் தென்றல் வீசும் : "இளவேனிற், பொழுது மெலநடந்து போவாய்" (43) என்றார் முன்னும்.

63. குழந்தை : "சிறுகாற் குழந்தாய்கேள்" (112) என்பர் பின் ; "வேள் சிறுதேர் விடுங்குழவித் தென்றல்" திருவாரூருலா, 189.

65. காளம் - காகளமென்னும் ஊது கருவி.

67. சார ரதம் மூன்றும் - கதியையுடைய அர்த்த ரதம், சமரதம், அதிரதம் என்னும் மூவகைத் தேர்களையும். சயித்து - வென்று. இரத மீது பயில் - ஏனைய இரதங்களுக்கும் மேலாக வழங்குகின்ற ; இரதம் - தேனுமாம். மார ரதம் - காமன்தேர் ; மகாரதம் ஏனைய மூன்றினும் சிறந்தது.

68. புண்ணியம் தாம் நிலம் - புண்ணியம் பரவுகின்ற இடம்.

69. முறுக்காலே கூடி முயங்காதார்க் கெல்லாம்
தெறுக்காலே யுன்காறென் காலே—தறைக்குள்

70. உரந்தருதெய் வத்து ளுனைப்போ லுடனே
வரந்தரு தெய்வமிலை மற்றென்—இரந்திரந்து

71. வேதந் துதிக்கவந்த மெய்ப்பொருளே யுன்னைத்தான்
பாதந் துதித்தாற் பயமுண்டோ—ஆதலால்

72. தேறுதிருக் கொன்றைநான் சேரப்போய் வண்ணமெல்லாம்
மாறுதிருக் கொன்றையுற்ற வண்ணங்கேள்—சீறிவரும்

73. அல்ல லுறுூர்கரத லாமலக மாயறிய
நெல்லி வனத்து ணிறைந்திருப்போன்—எல்லை

74. விளைத்தெழுந்த செந்தா மரைக்குளத்து நாப்பண்
கிளைத்தெழுந்த பத்ம கிரியான்—முளைத்தெழுந்து

75. தந்தைதா யில்லாத் தனைப்போல நெய்வார்த்து
வெந்திரியிட் டேற்று விளக்கினான்—வந்துலகை

76. உண்டேர்த்த வெள்ளத் துகாந்தத் திலுமசையாத்
திண்டீச் சரத்திற் சிறந்திருப்போன்—தொண்டர்

---

69. முறுக்கால் : ஆல், ஒடுவென்னும் பொருளில் வந்தது. தெறுக்கால் - தேள்.

72. திருக்கொன்றை - சிவபிரானது அழகிய கொன்றை மாலையை. வண்ணம் - அழகு. திருக்கு ஒன்றை - ஒரு மயக்கத்தை.

73. அல்லல்-துன்பம். காதலாமலகமாய் - உள்ளங்கை நெல்லிக்கனி போல். இத்தலம் தமிழில் நெல்லிவன மெனவும் வடமொழியில் தாத்திரீ வனமெனவும் வழங்கும். "சிந்தித் தெழுவார்க்கு நெல்லிக் கனியே", "அங்கை நெல்லியின் பழத்திடை யமுதே" (தே.) ; "தடக்கையி னெல்லிக் கனியெனக் காயினன்" திருவா. திருவண்டப்.

74. சிருஷ்டியாரம்பத்தில் இத்தலத்தில் உண்டான பத்மதீர்த்தத்தின் நடுவில் ஒரு தாமரை யரும்பு உண்டாயிற் றென்பதும், அதுவே மலையாயிற் றென்பதும், அந்த மலையே ஸ்தூலலிங்கமென்பதும், அப்பால் இறைவர் அதனுச்சியிற் சூக்ஷ்மலிங்கமாக எழுந்தருளிக் காட்சி கொடுத்தருளினாரென்பதும் இத்தல மாகாத்மியத்திற்கண்ட வரலாறுகள்.

75. தந்தை தாயில்லாத் தனைப் போல: "தாயுமிலி தந்தையிலி தான் றனியன் காணேடீ" (திருவா. திருச்சாழல், 3.) விளக்கு - தூண்டாவிளக்கு.

76. எல்லா மலையும் அழியுங் காலத்திலும் இம் மலை அழியாததென்பது புராண வரலாறு. திண்டீச்சரம்: அம்பிகையால் சங்காரம் செய்யப்பட்ட திண்டி என்னும் அசுரன் இறக்கும்பொழுது தன் பெயரால் இந் நகரம் வழங்கவேண்டு மென்று கேட்டுக் கொண்டபடி அமைந்த பெயர் இது.

77. மருட்கண் வலைநீங்க மலைமீதி லேநின்
றருட்கணாற் பார்க்கு மமலன்—பொருட்கொண்

78. டிடங்கொண்ட பூமியில்வா ழீசனா ரெல்லாம்
குடங்கொண் டபிடேகங் கொள்ளத்—திடங்கொண்ட

79. இத்தலத்தி லேமகிமை யேற்றமென் றேவருணன்
கைத்தலத்தி னாலபிடே கஞ்செய்ய—மொய்த்த

80. மகத்துவத் தாற்பொதிய மாமலையின் மிக்கென்
றகத்தியனார் பூசித் தருளச்—சகத்தையெலாம்

81. ஈன்ற பசலைநிற மின்னாந் தணியாமே
தோன்றி மறையுஞ் சொரூபத்தைத்—தான்றன்

82. இடையிலே கொண்டதென வேழ்கடலுந் தன்கட்
கடையிலே நின்று கவினப்—புடைசேர்

83. நவகண்ட மென்ன நலஞ்சேருங் கண்டம்
புவிகொண்ட கோலம் பொருந்திக்—கவிகொண்டல்

84. அங்கிருக்குங் கோதை யபிராம வல்லியொரு
பங்கிருக்கு மெங்கள் பரஞ்சோதி—தங்கு

85. நெடுவா னவர்க்குமிந்த நீணிலத்தோர்க்கும்
நடுவாய் மலைமேல்வாழ் நம்பன்—மடவாரிற்

---

77. மருட்கண் வலை - மருளாகிய வலை; கண் : அசை நிலை; "மீன் கணற்றதன் சுனையே" (புறநா. 109: 10) என்பதிற் போல. பொருட்கொண்டு - பொன் முதலிய செல்வங்களை உட்கொண்டு.

78-9 குடங்கொண்டு - குடத்தால்; கொண்டு : மூன்றும் வேற்றுமைச் சொல்லுருபு. நீர்க்கடவுளாகிய வருணன் இத்தலத்திற் பூசித்தானென்பது இத்தல வரலாறு. "வண்புனல் வேந்த னார்கலிக் குடத்து மணிமுகிற் கலயத்தின் முகந்து, தண்புன லாட்ட வாடுறுஞ் சோண சைலனே கைலை நாயகனே" (சோணசைல. 10) என்பதனோடு இஃது ஒப்பு நோக்கற்பாலது.

80. மிக்கென்று: மிக்கதென்றென்பதன் விகாரம்; "அமிழ்தினுமிக் கென்னு முனிக்கு" (தமிழ்விடு. 128.) பூமியைச் சமமாக்கும் பொருட்டு வட திசையிலிருந்து தென்றிசைக்குச் செல்லும் அகத்தியர் வந்து இத்தலத்தில் இறைவனைப் பூசித்தாரென்பது வரலாறு.

81. பசலை நிறம் - பசுமை நிறம். பசலை நிறம் இயல்பாக இருப்பதை உலகம் ஈன்றமையால் உண்டானதென்று கூறியது தற்குறிப்பேற்றம்; ஈன்றணிமையுள்ள பெண்களுக்குப் பசுமை நிறம் அமைதல் இயல்பு.

84. கோதை - கூந்தல். அபிராமவல்லி : இத்தலத்து அம்பிகையின் திருநாமம்.

86. கற்புடையா ளென்பதனைக் காணவபி ராமவல்லி
வெற்பிடை வாழ விரும்பினேன்—பொற்புடையார்

87. தீட்டும் புகழ்ச்சே வகப்பெருமாள் சிந்தையுடன்
கூட்டுந் திருவிழாக் கொண்டருள—மேட்டிலிருந்

88. துள்ளன் படைவார்வா ழூரிற் பரங்கருணை
வெள்ளம் பரந்து மிகுப்பதென—உள்ளுணர்ந்தோர்

89. சூழு மலையகன்று தொண்டர் குழாத்தோடும்
தாழு நகரந் தனில்வந்து—வேழ

90. முகனு மறுமுகனு முன்போத நூறு
மகனுநெடு மான்மகனும் வாழ்த்த—மிகநின்று

91. பொன்வெள்ளி செவ்வாய் புதன்காரி பானுமதி
மதன்வெள்ளி வெற்பிதென்று சேவிக்க—முன்முளைத்த

92. மூவர் முதலாக முப்பத்து முக்கோடி
தேவருங் கூடிச் சிவலோகம்—ஆவதிதே

93 திட்டாந்த மென்னத் திருநாண் முதனட்டொட்
டெட்டாந் திருநாளு மெய்தியபின்—கிட்டும்

94. விலங்கலிதைக் காணவட மேருவந்த தென்ன
இலங்கிய தேர்மீதி லேறி—வலங்கொள்ள

---

86. கற்புடையாள் - கற்பை உடையாள்; கல் புடையாள் - மலையினிடத்தே உள்ளாளென்பதும் ஒரு பொருள்.

87. சேவகம் - வீரம். பெருமாள் - திருநந்திதேவர். திருநந்திதேவர் திருவிழாக் காலத்து ஆவன செய்தல் மரபு; சண்டீசர் விழாத்திருமுகத்தை யாவருக்கும் போக்கும் திருப்பணி உடையாராதலின் அவரையே இங்குக் கூறியதாகக் கொள்ளலும் ஆம்; "தாரைவெள் ளிலைவேன் மைந்தன் றன்னெடுந் தலைவி யோடும், வீரசிங் காத னத்து மேவினன் விழாவிற் கெய்தச், சீர்கெழு தேவர்க் கெல்லாந் திருமுக மெழுதுஞ் செம்மல், வார்தரு கமலச் செந்தாண் மனத்தினில் வழுத்தி வாழ்வாம்" திருவாரூர்ப்புராணம், பாயிரம், 15.

89. திருவிழாக் கொண்டருளுதல் அடிவாரத்திலுள்ள ஒரு திருக்கோயிலில்.

90. நூறுமகன் - இந்திரன்; மகம் - யாகம். மால் மகன் - மன்மதன். அவன் வாழ்த்துதலை, "தீங்கரும்பைக் கோணியன் வாழ்த்த" (காளமேகக் கவிஞர் பாடல்) என்று பிறரும் கூறுதல் காண்க.

91. காரி - சனி.

94. தேருக்கு மேரு உவமை. வலங்கொள்ள - திருவுலாக் கொள்ளா நிற்க.

95. இம்மா தரையிடத்தி லிவ்விழா வில்லையென
நம்மா தரையடுத்து நான்சென்றேன்—அம்ம

96. தெரிசித்தேன் சேவித்தேன் சிந்தித்தேன் கண்ணுற்
பரிசித்தே னுள்ளே பதித்தேன்—துரிசற்ற

97. மானிட மானீர் மழுவல மானீரே
மானிட மானீர் மருவீரோ—மேனியிலே

98. காமரத்தை யார்தாங் கலந்திருப்பீர் பூங்குயில்சேர்
காமரத்தை யார்தாங் கடிந்திடுவார்—தாமே

99. மராமரமா மேழுந்தம் வாளியா லெய்த
இராமரமா மேனுமெய் யாரோ—தராதலத்தில்

100. வெம்பனை யாருமன்றில் வீச்சு மனையேச்சும்
கொம்பனை யாருமன்றிக் கூற்றுண்டோ—நம்பிரே

101. இவ்விதழி மாலையெனக் கீந்திட ரும்முடைய
செவ்விதழி மாலையென்றாற் றீர்ப்பீரே—செவ்விமதன்

---

95. இ மா தரையிடத்தில் - இந்தப் பெரிய பூமியில். இ விழா - இதனைப் போன்ற விழா. என - என்றெண்ணி. நம் மாதரை - ஆயத்தார் செவிலியர் முதலியோரை.

96. பரிசித்தேன்=ஸ்பரிசித்தேன்; இங்கே கண்டேனென்பது பொருள்.

97. மான் இடம் ஆனீர் - மானை இடக்கையில் தாங்கியவராக ஆனீர். மானிட மான் நீர் மருவீரோ-மானிடப்பெண்ணை நீவிர் பொருந்த மாட்டீரோ.

98. காமர் அத்தையார் தாம் - மன்மதனுடைய அத்தையாராகிய உமாதேவியாரை; காமன் பெயர் காமரெனவும் வழங்கும்; "காமரை வென்ற கண்ணோன்" (சிற். 164.) கா மரத்தை - சோலையிலுள்ள மாமரத்தை; குயில் சேரும் மரம் மாமரம்.

99. மராமரமாம் எழும்-எழு மராமரங்களையும். வாளியால்-அம்பால். இராமர் அ மா மேலும்; அ - மேலே சுட்டிய. இவ்வரலாறு இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டத்தில் உள்ளது. இத்தலத்திற் பூசித்தவர்களுள் இராமரும் ஒருவர்.

100. வெ பனை ஆரும் - வெம்மையையுடைய பனைமரத்தில் தங்கும். அன்றில் வீச்சும் - அன்றிற் பறவையின் குரலும்; சில பறவையினொலியை வீச்சென்றல் மரபு; "மேல்புறத்தி லாந்தையிட்ட வீச்சு நன்றம்மே" (திருக் குற்றலக்குறவஞ்சி, 54.) அனை ஏச்சும் - தாய் ஏசுதலும்.

101. இ இதழி மாலை - இந்தக் கொன்றை மாலையை. உம்முடைய செ இதழி மாலை என்றால் - உம் தேவியாராகிய செம்மையையுடைய இதழையுடைய உமாதேவியாரது காம மயக்கத்தைத் தீர்க்கவேண்டுமென்றால்;

102. போரம்பஞ் செய்துடலிற் புண்படுத்த வேசமருக்
காரம்பஞ் செய்துடலி ஞளீரே—ஒரூரை

103. அந்தச்செவ் வந்திப்போ தாலழித்தீ ரேயப்போ
திந்தச்செவ் வந்திப்போ தில்லையோ—வந்தநீர்

104. துன்று யிரங்காது சூழ்ந்திருக்க நானழைத்தால்
நன்று யிரங்காது நைவித்தீர்—என்று

105. நடந்து பதுமகிரி நாதன்றேர் முன்னே
தொடர்ந்து தொடர்ந்துதுயர் சொன்னேன்—கிடந்து

106. மறுகுதலை நோக்காது வான்முறுவல் கோட்டிச்
சிறுகுதலை மங்கையுடன் சென்றுன்—குறங்கையார்

107. சங்கங் கலேந்தேன் றனிமனத்தைத் தேடிப்போய்
அங்கங் கலேந்தே னயல்காணேன்—கொங்கைவரை

---

செ இதழ் - சிவப்பை உடைய உதடு ; "புயந்தழுவுங் கண்ணியுஞ்செவ் விதழியேமால், பூண்ட கயற் கண்ணியுஞ்செவ் விதழியேமால்" அருணைக். 14.

102. போர் அம்பு அஞ்சு எய்து. ஆரம்பம் - தொடக்கம். உடலின் - போர் செய்தால். ஆளீர் - அப்போரை விலக்கி அடியேனை ஆட்கொள்ளாமல் இருக்கின்றீர் ; ஆட்கொண்டருள்வீராகவெனலுமாம்.

102-3. ஒரூரை - உறையூரை. அந்தச் செவ்வந்திப் போதால் - சாரமாமுனிவரென்பவர் வளர்த்து வந்த நந்தனவனத்திலுள்ள செவ்வந்திப் போது காரணமாக. சிராமலையில் சிவபெருமான் அருச்சனைக்காக அம்முனிவர் வைத்த செவ்வந்தித் தோட்டத்திலிருந்த பூவை உறையூரிலிருந்த ஒரு சோழனது பணியாள் கொய்து மாலை கட்டி அவ்வரசனுக்குக் கொடுப்ப, அவன் அதனைத் தன் தேவிக்குக் கொடுத்தான். இங்ஙனம் நாடோறும் நடந்து வரச் செவ்வந்தி மலர் குறைதலை யறிந்த முனிவர் ஒளித்திருந்து கண்டு உண்மையை அறிந்து மன்னனிடம் முறையிட்டார். அவன் பராமுகனுயிருப்ப முனிவர் தாயுமானவர்பால் முறையிட அப்பெருமான் உறையூரை நோக்கித் திரும்பவே மண்மாரி பெய்து உறையூரை அழித்து விட்டது. இது செவ்வந்திப் புராணத்திற் கண்ட வரலாறு.

இந்தச் செவ்வந்திப் போதினுல் எரித்திருக்கலாமென்பது தலைவியின் எண்ணம் ; செவ்வந்திப்போது - மாலைக் காலம்.

104. துன்று - நெருங்கிய. ஆயிரங்காது: "எங்குஞ் செவியுடையாய் கேளாயோ" (திருவிளை. நரிபரி. 22.) ஆயிரம் பன்மையைச் சுட்டியது.

106. மறுகுதலை - நான் வருந்துதலை. முறுவல் கோட்டி - புன்னகை செய்து.

107. சங்கம் - வளை. அங்கு அங்கு அலைந்தேன்.

108. ஈசன் சிலையானே னென்கலை பத்மகிரி
வாசன் கலையானேன் வாள்விழிரா—மேசன்

109. தனுக்கோடி யானேன் றனுக்கோடி கொள்கா
மனுக்கோடி யெங்கே மறைவேன்—அனுக்கோ

110. டினியா மினிவந்தா லென்செய்வேன் சிந்தை
கனியா மினிகாண் கடவுள்—தனிவருமுன்

111. நேர்வந்த தென்றலே நீவந்தாய் நீவரவே
தார்வந்த தென்றலே தப்புமோ—சேரும்

112. சிறுகாற் குழந்தாய்கே டிண்டீசர் முன்னே
அறுகாற் பறவைசெல்ல லாமோ—பொறிசேரும்

113. வென்றி தருமயிருன் வேளை யறியாது
சென்று மொழிவதினிச் செவ்வையோ—என்றும்

114. புதிய மடவன்னம் போயுரைக்கு மென்றால்
விதிவச மெப்படியோ விள்ளாய்—துதிவாய்ச்

---

107-8. ஈசன் சிலை - மேரு ; பசலை பூத்த தென்பது கருத்து. கலை - ஆடை. பத்மகிரிவாசன் கலை - திகம்பரம்; "திகம்பரரா நம்மைத் தெரிந் தடைந்த யாமும், திகம்பரரே யாகிச் சிறந்தோம்" திருவிடை. உலா, 319.

108-9. வாள் விழி . . . . தனுக்கோடியானேனென்றது கண்ணில் நீர் பெருகிற்றென்பதைக் குறிப்பித்தது. கண்கள் இரண்டாதலின் அவற்றிற் கேற்ப இரண்டு கடலும் சந்திக்கும் தனுக்கோடியைக் கூறினர். தனு கோடி - கோடி விற்களை. காமனுக்கு - காமன் செய்யும் போரை நீக்கிக் கொள்ளுதற்கு. அனுக்கோடு - வருந்தச் செய்தலோடு; அனுக்கு - வருத்துதல்.

110. இனி - இனிமேல். யாமினி - இராப்பொழுது. சிந்தை - இறை வன் திருவுள்ளம். கனியாம் - கனிதலையுறும் ; இரங்கு மென்றபடி. 'கடவுள் தனிவரும்' என்றது துணிவுபற்றிச் சொல்லியது.

111. தார் வந்தது என்றல் - இறைவனுடைய மார்பின் மாலை வந்து விட்டது என்று சொல்லுதல்.

112. சிறுகாற் குழந்தாய் - இளந்தென்றலே ; சிறிய காலையுடைய குழந்தையே என்பது தொனிப்பொருள். அறுகாற்பறவை - வண்டு ; அற்ற காலையுடைய பறவை யென்பது வேறு பொருள். பொறி - புள்ளி.

113. வேளையறியாது - முருகக்கடவுளை யறியாமல்; செல்லுஞ் சமயம் அறியாமலென்பது வேறு பொருள்.

114. மடவன்னம் - இளமையையுடைய அன்னப்பறவை ; அறிவில் லாத அன்னமென்பது வேறு பொருள். விதி வசம் - பிரமாவினது வச முள்ளது ; எனது தலைவிதி வசமென்பது வேறு பொருள்.

115. செகஞ்சொல்லு மெய்ப்பொருண்முன் சிந்தைகளி கூரச்
சுகஞ்சொன்னாற் றன்பஞ் சொலுமோ—மிகுந்த

116. பெலங்கொண்ட கார்தான் பிரம்படி காரன்
விலங்கென்றா லோடி விடுமே—நலங்கொள்ளக்

117. கோதையார் சொன்னாலுங் கூடாதே யாதலினென்
தூதையார் சொல்வார் துணிந்துரையாய்—நீதான்

118. மருத்துவா வென்றழைக்க வந்துமய னேயைத்
திருத்துவா யென்கவலை தீர்ப்பாய்—விரைத்தேன்

119. தடாகங் கஞந்தா மரைக்குளமு மண்ட
கடாகங் களைத்தீண்டுங் காவும்—விடாய்தீரும்

120. பந்திச் சுனையும் பலவுண்டு கோடைக்கா
வந்திச் சுனைவேண்டு வாருமுண்டு—தொந்திப்பாய்

121. மந்தா நிலமே வசப்படா தேதுயரம்
தந்தா னிலமே தனிச்சென்று—பிந்தாது

---

115. சுகம் - கிளி ; இன்பமென்பது மற்றொரு பொருள்.

116. பிரம்படிகாரன் - திருநந்திதேவர். விலங்கு - விலகிப்போ ; காலி விடும் விலங்கென்பது வேறு பொருள். இறைவன் சந்நிதியில் நின்ற கூட்டத்தைப் பிரம்பால் அடித்து ஒதுக்கும் திருநந்தி தேவர் மேகத்தைப் பார்த்து விலகென்னும் பொருள்பட விலங்கு என்று கூறின் மேகம் முன் பொருகால் மதுரையில் பாண்டியனால் விலங்கிடப்பட்ட துன்ப முற்றதாத வின் விலங்கிடுவான் போலு மென்று பயந்து ஓடிவிடு மென்பது பொருள்.

117. கோதையார் - பாங்கியர் ; கோதை யார் சொன்னாலும் - குற்றத்தை எவர் கூறினாலுமென்பதும் ஒரு பொருள். கூடாது - நிறைவேறாது. நீ துணிந்து உரையாய் என்க ; உரையாய் - உரைப்பாயாக.

118. மருத்து வா - காற்றே வா ; வைத்தியனே என்பது வேறு பொருள்.

119. விடாய் - தண்ணீர் விருப்பம்.

120. பந்தி - வரிசையாகவுள்ள. சுனை: இத்தலத்திற் பல சுனைகளும் தடங்களும் உண்டு ; அவையாவன: பத்ம தீர்த்தம், வருண தீர்த்தம், கதம்ப தீர்த்தம், பாண்டவ தீர்த்தம், பிரம தீர்த்தம், திரௌபதி தீர்த்தம், சிவகங்கை, கமல தீர்த்தம் முதலியன. கோடைக்கா - கோடையின் வெப்பத்தை நீக்கிக் கொள்ளும்பொருட்டு. வந்திச்சு - வந்தித்து; வணங்கி. தொந்திப்பு - தொடர்பு.

121. வசப்படாதே - என்க்கு அகப்படாமல். தந்தான் இலமே ; தந்தான் - தந்தவராகிய ஸ்ரீ பத்மகிரிநாதருடைய; இலம் - இல்லம்; கோயில், பிந்தாது - பிற்படாமல்; தாமதியாமல்.

122. சாளர வாச றவழ்ந்தோடிச் சந்தடியின்
ஆளாவஞ் சற்றே யடங்கியபின்—வாளாவம்

123. தாங்கு புயத்தான் றனக்கென் றுயர்சொல்லி
வாங்குகொன்றை மாலைகொண்டு வா.

---

122. சந்தடி - மனிதர்களின் கூட்டம். ஆள் அரவம்-மக்கள் பேசும் ஒலி. வாள்-ஒளி.

123. கொன்றை - சிவபெருமானது அடையாளமாலை.